# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களிடையே பொதுப் பேச்சு பதகளிப்பு

**நிமல்டா, சி., அபிராமி, இ.**

மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
sathukamsa@gmail.com

*பொதுப் பேச்சு பதகளிப்பு என்பது ஓர் உளவியல் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. பல்கலைக்கழக மாணவர்களுக்கு கற்றல் மட்டுமல்ல பொதுவில் பேசுகின்ற திறனும் முக்கியமானதாக காணப்படுகின்றது. இவை கற்கின்ற காலப்பகுதியிலே வளர்க்கப்பட வேண்டியதொன்று. ஆனால் பல மாணவர்கள் கற்றலில் சிறந்து விளங்கினாலும், பொதுப் பேச்சுக்கென்று வரும் போது பதகளிப்பு அடைபவர்களாக காணப்படுகின்றனர். இதற்குத் தடையாக மாணவர்களிடம் காணப்படுகின்ற ஓர் உளவியல் பிரச்சினையாக பதகளிப்பானது காணப்படுகின்றது. அந்தவகையில் மாணவர்கள் பொதுவில் பேசுகின்ற போது* (Presentation, Speech) *பயம், பதற்றம் அடைகின்றார்கள். எனவே மாணவர்கள் மத்தியில் காணப்படுகின்ற பொதுப் பேச்சு பதகளிப்பானது இவ்வாய்வில் சிறப்பாக ஆராயப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்கென யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப் பிரிவிற்கு உட்பட்ட நான்காம் வருட மாணவர்களில் எளிய எழுமாற்று மாதிரி நுட்பத்தை பயன்படுத்தி 200 பேர் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் பெண் மாணவர்களில் 114 (57%) மாதிரிகளும், ஆண் மாணவர்களில் 86 (43%) மாதிரிகளும் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டனர். இவ் ஆய்விற்கான தரவுகள் ஆய்வாளனால் விருத்தி செய்யப்பட்ட தனிப்பட்ட விபரங்களை கொண்ட பகுதி* I *உடன், பகுதி* II *இல்* McCroskey *(1970) இனால் விருத்தி செய்யப்பட்ட* Personal Report of public speaking Anxiety (PRPSA) *வினாக்கொத்து மாணவர்களிடம் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. இவ் ஆய்விற்கு* T. Test , Regression Analysis, Correlation, ANOVA *போன்ற பகுப்பாய்வு கருவிகள் பயன்படுத்தப்பட்டு, புள்ளி விபரவியல் மென்மொபொதி 21 வது பதிப்பில்* (Statistical Package For The Social Science IBM SPSS 21) *பகுப்பாய்வு செய்யப்பட்டது. இதன் முடிவின் படி பொதுப் பேச்சு பதகளிப்பில் 5% ஆனவர்கள் அதிகளவான பதகளிப்பையும், மிதமான பொதுப் பேச்சு பதகளிப்பு* 54% *ஆகவும், குறைவான பொதுப் பேச்சு பதகளிப்பு 40% ஆகவும் காணப்படுகின்றது என்பது ஆய்வின் முடிவிலிருந்து கண்டறியப்பட்டது. பொதுப் பேச்சு பதகளிப்பில் தாக்கம் செலுத்தும் காரணியில் அதிகளவு விரிவுரையாளர்களின் விமர்சனம் பற்றிய பயம், சக மாணவர்களின் விமர்சனம் பற்றிய பயம், வெட்கம், மற்றவர்கள் மதிப்பிட்டுக் கொள்வார்கள் என்ற பயம் போன்றன அதிகளவில் தாக்கம் செலுத்துவது கண்டறியப்பட்டது. மாணவர்களிடம் காணப்படும் பொதுப் பேச்சுப் பதகளிப்பானது மதிப்பிடப்பட்டு அதற்கான காரணங்கள், அறிகுறிகள் மற்றும் அதனால் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் கண்டறியப்பட்டு இவை மாணவர்களின் கற்றல் சார் அடைவுகளிலும், எதிர்கால தொழிலை பெற்றுக் கொள்வதில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டு, அவற்றிற்கான முடிவுகளும் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.*

**திறவுச்சொற்கள்:** பயம், பதற்றம், பதகளிப்பு, பொதுப் பேச்சுப் பதகளிப்பு, விமர்சனம்